கற்பகம்

KATPAKAM

திங்கள் இதழ்

விலை ரூபா 10/-

மலர்-05 ஏப்ரல்-2012 இதழ்-54

குறளமுதம்-54

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஒதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்-6-அறத்துப்பால்-வாழ்க்கைத்துணை

பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பென்னும் திண்மைஉண் டாகப் பெறின்

கற்பு என்னும் கலங்கா நிலைமை மட்டும் அமைந்திருக்குமானால், (அக்கற்புடைய) பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு எவை உள்ளன?

40 ஆண்டுகளில்...

ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவு விழாவினை எதிர்வரும் மே மாதம் 1ம் திகதி கொண்டாடுவதற்கு வடமாகாண பனை தென்னை வள அபவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40 ஆண்டுகால செயற்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் மலர் ஒன்றினை வெளியிடுவதற்கு 12பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்குழுவில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன், தென்மராட்சிக் கொத்தணித் தலைவர் திரு கி.பூபாலசிங்கம், வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு செ.செல்வராசா, சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு க.மெய்யழகன், சமாசப் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி.குணரத்தினம், சமாசக் கல்வி உத்தியோகத்தர் திரு வ.சிவகுமார், பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்க பொதுமுகாமையாளர் திரு கி.குணரத்தினம், பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்க பொதுமுகாமையாளர்

[8ம் பக்கம் பார்க்க]

கற்பகம் வாசகர்கள் மற்றும்
கூட்டுறவாளர்கள் அனைவருக்கும்
கற்பகத்தின்
சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துகள்

மூலிகை ரொபி தயாரிப்பு!

2012ம் ஆண்டு உபஉணவு உற்பத்தி திட்ட ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து யாழ் மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ரொபி ஒன்றினை உற்பத்தி செய்து வருகிறது.

இவ் உற்பத்தியை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் சந்தைப்படுத்துவதற்கு ஏற்பாடுகளை கூட்டுறவு திணைக்களத்தின் அனுசரணையுடன் சித்த மருத்துவ சங்கம் மேற்கொண்டு வருகிறது.

90வது சர்வதேச கூட்டுறவுதின ஏற்பாடுகள்!

90வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன சிறப்பாகக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ளன.

2012ம் ஆண்டுக்கான சர்வதேச கூட்டுறவுதின விழா தொடர்பாக கூட்டுறவு ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களினால் கடந்த மாதம் 15ம் திகதி கூட்டப்பட்ட கூட்டத்தில் அக்கடிதம் வாசித்து காட்டப்பட்டதை அடுத்து சங்கங்களினால் கூட்டுறவுதின விழா தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற 89வது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்குபற்றி மாவட்ட, மாகாண மட்டங்களில் வெற்றியீட்டியது போன்று இவ்வருடமும் கூடுதலான சங்கங்கள்

[3ம் பக்கம் பார்க்க]

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

சிந்தனைத்துளி

"மனிதர் என்ற ரீதியில் சமத்துவத்துடன் ஜனநாயக முறையில் ஒருங்கிணைந்து செயற்படும் முறையே கூட்டுறவாகும் " --கூட்டுறவு மேதை கல்வேட்--

கற்பகக்கரு

40வது ஆண்டில்...!

முதலாளிமார்களின் சுரண்டல்களில் இருந்து ஏழைத் தொழிலாளர்களை விடுவிக்கும் நோக்குடன் சமூக முன்னோடிகளின் விடாமுயற்சியினால் 1972ம் ஆண்டு அப்போது நிதியமைச்சராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா வினால் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்தினை அடுத்து "கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்" என கூட்டுறவு ஆணையாளரினால் சட்டரீதியாக பதிவுசெய்யப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட இச்சங்கம், நாட்டில் அப்போது ஏற்பட்ட உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டை அடுத்து, உபஉணவு உற்பத்தியில் குறிப்பாக பனைவெல்ல உற்பத்தியில் ஈடுபட்டதைத் தொடர்ந்து "தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்" என பெயர் மாற்றம் பெற்றதோடு, பெரும்பாலான சங்கங்கள் உபஉணவு உற்பத்தியில் ஈடுபட்டு அன்றைய மக்களின் தேவையை முடிந்தவரை பூர்த்திசெய்து வந்துள்ளதுடன், சமூகம் சார்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொடுத்திருந்தது.

காலத்தின் தேவைக்கேற்பவும், நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் இச்சங்கங்கள் "பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்" என பெயர் மாற்றம் பெற்று இன்றுவரை இப்பெயருடன் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் இச்சங்கங்கள் தங்களது தேவைகளை ஒரு அமைப்பின்கீழ் இருந்து பெற்றுக்கொள்ளும் முகமாக ஒன்றுகூடி தமக்கென "வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்" என்ற பெயரில் ஓர் உச்ச மட்ட அமைப்பினை உருவாக்கி, பதிவு செய்து அங்கத்தவர், பணியாளர்களுக்குரிய சேவைகளை திறம்பட ஆற்றிவந்ததுடன், தனது பெயரை "வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்" என பெயர் மாற்றம் செய்து இன்றுவரை அங்கத்துவ சங்கங்களினது அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் சேவையாற்றி வருகின்றது.

இச்சங்கங்களின் பரினாம வளர்ச்சியின் மற்றுமொரு படியாக கொத்தனிகள் உருவாக்கப்பட்டு, அக்கொத்தனிகளினாலேயே வடிசாலைகள் உருவாக்கப்பட்டு மதுசார உற்பத்திகளை மேற்கொண்டு, அங்கத்தவர்களது சமூக, பொருளாதார, வாழ்வாதார மேம்பாட்டுக்கு பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இதேபோல் இந்த நிறுவனங்கள் ஒன்றுசேர்ந்து சித்தமருத்துவத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டு, சேவையாற்றி வருகின்றது.

இவ்வாறான கட்டமைப்புடன் செயற்பட்டுவரும் பனை தென்னை வள நிறுவனங்கள் இன்று 40வது ஆண்டில் கால் பதிப்பதை கற்பகம் வாழ்த்தி நிற்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

இலங்கையின் நீதிமன்ற அமைப்பு

வரலாறு சார்ந்த அபிவிருத்தி 1

இலங்கையின் நீதிமன்ற அமைப்பின் வரலாறு சார்ந்த அபிவிருத்தியை நான்கு கட்டங்களாகப் பிரித்துக் காட்ட முடியும்.

01) கிறிஸ்துவருடம் 1505ம் ஆண்டுக்கு முந்திய காலம்.
02) போர்த்துக்கீசர் ஆட்சிசெய்த காலம் (கி.பி.1505-1660)
03) ஒல்லாந்தர் ஆட்சிசெய்த காலம் (கி.பி.1660-1796)
04) பிரித்தானியர் ஆட்சிசெய்த காலம் (கி.பி.1796-1948)

பழைய இலங்கையில் அரச சபையைத்தான் மிகவும் உயர்ந்த நீதிமன்றமாகக் கருதி வந்தனர். இந்த அரச சபை அரசரின் தலைமையில் கூட்டப்பட்டதுடன், உயர்ந்த நீதிமன்ற உத்தியோகத்தராக எல்லையற்ற அதிகாரங்களை அரசரே தனக்காக வகுத்துக்கொண்டார். மகாவம்சத்திற்கு இணங்க கி.மு.377ம் ஆண்டு தொடக்கம் கி.மு.307ம் ஆண்டுவரை அரசாட்சி செய்து வந்த பண்டுகாபய மன்னனுடைய அரசாட்சிக் காலத்தில் இலங்கையின் சரித்திரத்தில் முறையாக **"கிராமசபை"** (Gam Sabha) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கிராம சபை முறைகள் பற்றி மிகவும் விளக்கமான படங்கள் 10ம் நூற்றாண்டுக்கு சொந்தமான கல்வெட்டுகளிலிருந்து பெறக்கூடியதாக இருக்கிறது. அதன் பிரகாரம் கிராமத்தின் சட்டம் மற்றும் சமாதானத்தை நடாத்தி வந்தமை மற்றும் தொல்லைகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பாக போதியளவு கருமங்கள் கிராம சபைகளினால் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளதெனத் தெரிகிறது.

கி.பி. 1505ல் நடைபெற்ற போர்த்துக்கீசரின் வருகையுடன் இலங்கையின் பழைய நீதிமன்ற அமைப்புக்களில் மிகவும் பலத்த வீழ்ச்சி ஆரம்பமானது. எப்படியிருந்தபோதிலும் போர்த்துக்கீசரின் காலத்தில் வழக்கத்திலிருந்த நீதிமன்ற முறைமைகள் அழிவுக்குட்படுத்தப்பட்ட போதிலும், அவர்களினால் ஒரு புதிய நீதிமன்ற அமைப்புக்கள் அறிமுகம் செய்துவைக்கப்படவில்லை. கி.பி. 1660ல் ஒல்லாந்தர் இந்த நாட்டின் கரையோரப் பகுதிகள் முழுவதையும் தமது ஆட்சிக்குட்படுத்தியதுடன், அவர்களினால் இந்த நாட்டுக்கு உரோம-ஒல்லாந்து (Roman-Dutch Law) சட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அப்படியே இலங்கையின் கரையோரப் பகுதிகளில் புதிய நீதிமன்ற அமைப்புகள் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டது. அவைகள் **"லான்ட் றாத்"** (Land Raad), **"சிவில் றாத்"** (Civil Raad) மற்றும் **"றாத்வான் யுஸ்ரிற்றியர்"** (Raad Van Justitia) என அழைக்கப்படும் நீதிமன்றங்களாகும்.

கிறிஸ்து வருடம் 1796ல் பிரித்தானியர்கள் இந்த நாட்டின் கரையோர மாகாணங்களை தமது ஆட்சிக்குட்படுத்திக் கொண்டார்கள். 1815ம் வருடம் வரைக்கும் மலைநாட்டுப் பிரதேசங்களை தமது ஆட்சிக்குட்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், அதன் காரணமாக 1815ம் வருடம் வரை மலைநாட்டுப் பிரதேசங்களில் பழைய நீதிமன்ற அமைப்புக்களைச் செயற்படுத்தினார்கள். கிறிஸ்து வருடம் 1815இன் பின்பு இந்த நாட்டு நீதிமன்ற அமைப்புக்களில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக 1948ம் வருடத்தில் இலங்கை சுதந்திரமடைந்தபோது புராதன இலங்கையில் நீதிமன்ற அமைப்பு முழுமையாக செயலிழந்து இருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பும் காலத்திற்கு காலம் இந்த நாட்டின் நீதிமன்ற அமைப்பு திருத்தங்களுக்குட்படுத்தப்பட்டதுடன், இப்புத்தகத்தின் இனிவரும் அதிகாரங்கள்மூலம் சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது. அப்படியான பலவகைப்பட்ட மாற்றங்களுடன் தற்போதைய இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நீதிமன்ற அமைப்புக்கள் இதுவேயாகும்.

(வளரும்)

நிகழ்வுகளின் நிழல்கள் !

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் கடந்த மாதம் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்களையும், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதையும், சமாசத் தலைவர் திரு நா.கணேசன், கூ.அ.உ.ஆணையாளர், தெல்லிப்பளை சங்க பொதுமுகாமையாளர் திரு கா.சிவஞானம், வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு சி.செல்வராசா ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், மா.கூ.அ.உத்தியோகத்தர் திரு இ.பாலச்சந்திரன் மற்றும் விருந்தினர்களுடன் முன்பள்ளி ஆசிரியைகள், மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

10வது சர்வதேச கூட்டுறவு ..... 1ம் பக்கத் தொடர்ச்சி

பங்குபற்றி வெற்றியீட்ட வேண்டு மெனவும், இவ்வருடம் மாவட்டத் தினை பிரதிபலிக்கக்கூடியதாகவும் உறுப்பினர்களை ஊக்கப்படுத் துவதற்காகவும் பனந்தொழில் வல் லுநர்களுக்கான மரம் ஏறும் போட்டியினை நடத்தி வெற்றி பெற்றவர்களை கௌரவிக்க வேண்டுமெனவும், சங்கங்களில் அதிகளவான அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென வும், மாவட்ட மட்டத்தில் கிரிக்கட் விளையாட்டு நிகழ்வுகள், மரம் நடுகைத் திட்டம், சித்த மருத்துவ மூலிகை உற்பத்தி என்பனவற்றை முன்னெடுக்க வேண்டுமெனவும், கடந்த வருடம் போன்று இவ்வரு டமும் வறுமைக்கோட்டின் கீழுள்ள சங்க உறுப்பினர்களுக்கு மாவ ட்டத்தில் 5 வீடுகளை சங்கங்கள் அமைத்துக் கொடுப்பதுடன், 5 உறுப்பினர்களின் வீடுகளை புன ரமைத்து கொடுக்க வேண்டு மெனவும் கூ.அ.உ.ஆணையா ளரால் தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டத் தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளில். 5 வீடுகளை அமை க்கும் திட்டத்தினை மேற்கொள் வதற்கு கோண்டாவில், சுன்னாகம், சங்கானை, கோப்பாய், ஊர்காவற் றுறை பனை தென்னை வளச் சங் கங்களும், 5 உறுப்பினர்களின் வீடுகளை புனரமைப்பு செய்வதற்கு பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, காரைநகர், மானிப்பாய், யாழ்ப் பாணம் பனை தென்னை வளச் சங்கங்களும் தெரிவு செய்யப்பட் டுள்ளன.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2012

பயிற்சி வினாத்தாள்-3

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

பகுதி-1

மிகவும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) 

பாரஊர்தி ஒன்றின் பின்புறத்தில் தகடு ஒன்றில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் புலப்படுவது?

i) பார ஊர்தி ஒரு மணித்தியாலத்தில் செல்லும் தூரம் ii) வாகனத்தின் இலக்கம்
iii) 1 லீற்றர் எரிபொருளுக்குச் செல்லும் தூரம். iv) பார ஊர்தியின் வேகம்

02) 60ம் ஆண்டில் கொண்டாடப்படுவது மணிவிழா ஆயின் 25வது ஆண்டில் கொண்டாடப்படுவது?

i) வைரவிழா ii) வெள்ளிவிழா iii) பவளவிழா iv) தங்கவிழா

03) எமது வீடுகளுக்கு கிடைக்கும் மின்சாரத்தின் அளவு?

i) 100/110V ii) 11000/33000V iii) 220/240V iv) 110/220V

04) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதுவதற்கு தகுதியுடைய வயதெல்லை?

i) 9வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டவர் ii) 10 வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்டவர்
iii) 11 வயதுக்கு மேற்பட்டவர் iv) 09 வயதுக்கு கீழ்ப்பட்டவர்

05) XIV என்கின்ற உரோம எண்ணை தளவாடியில் பார்த்தால் தோன்றும் விதம்?

i) XIA ii) VIX iii) XIV iv) IXV

06) மேடம், மிதுனம், மகரம், சிங்கம் போன்ற சொற்கள் அடங்குவது?

i) நட்சத்திரங்கள் ii) தோட்டங்கள் iii) தெரு வீதிகள் iv) ராசிகள்

07) 2/3 எனும் எண்ணுக்கு சமனாகும் எண் யாது?

i) 4/6 ii) 1/2 ii) 3/2 ii) 6/4

08) ஒரு புத்தகத்தை மேலோட்டமாகப் பார்ப்பதைக் குறிக்கும் சொல்?

i) ருசி பார்த்தல் ii) கிரகித்தல் iii) உற்றுநோக்குதல் iv) நுனிப்புல் மேய்தல்

09) மிதுவின் வயது 23, விது லகிருவைவிட 03 வயது இளையவன். விது மிதுவைவிட 01 வயது மூத்தவன் எனின், லகிருவின் வயது எத்தனை?

i) 23 ii) 25 iii) 27 iv) 32

10) "இறைத்த கிணறே ஊறும்" என்பதன் உட்பொருள்?

i) முயற்சி உயர்ச்சியை ஏற்படுத்தும் ii) பொறுமை வெற்றியைத் தரும்
iii) உள்ளதுதான் எப்போதும் உண்டு iv) தீமை செய்பவன் துன்பப்படுவான்

பின்வரும் பந்தியை வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்படும் **பகுதி-2**களுக்கு விடை தருக.

"கடவுளின் படைப்புக்கள் பல வகைப்பட்டன. அப்படைப்புக்களில் நான் ஒரு விசித்திரமான பிராணி. நான் காடுகளிலும் மரங்கள் இருக்கும் இடங்களிலும் வாழ்விடத்தை அமைத்துக் கொள்வேன். நான் மரங்களிலுள்ள பழங்களை விரும்பி உண்பேன். அப்பழங்களைக் கொறித்துக் கொறித்துச் சுவைத்து உண்பேன். என்முகம் கூரானது. நான் யாரையாவது கண்டால் நான்கு கால்களாலும் ஓடுவேன். என் முன்னங்கால்களைவிட பின்னங்கால்கள் கட்டையானவையாகும். அழகிய உடலமைப்பைக் கொண்ட எனக்கு அடர்த்தியான மயிர்கொண்ட வால் இருக்கும்.

01) இப்பந்தியில் கூறப்பட்ட நான் யார்?

02) இங்கு நான் விரும்பி உண்ணும் உணவு எது? 03) இங்கு விசித்திரம் என்பதன் பொருள் என்ன?

✿ கீழே தரப்படும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக?

04) பழம் - ..... 05) மரம் - .....

✿ பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் தருக?

06) நீளம் - ..... 07) நாடு - .....

✿ பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக?

08) உடலமைப்பு - ..... 09) விரும்பியுண்பேன்-.....

✿ பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக?

10) வாழ்வு + இடம் ..... 11) பூ + சோலை .....

✿ பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதத்தைத் தருக?

12) ஞாயிற்றுக்கிழமை - ..... 13) நண்பன் - .....

✿ பின்வரும் சொற்களுக்குரிய தமிழ்ப் பதத்தைத் தருக?

14) I am sorry - ..... 15) I am reading a book - .....

✿ பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்தைத் தமிழில் தருக?

16) கொஹோமத - ..... 17) பொ(த்)த தென்ன - .....

✿ பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய கருத்தைச் சிங்களத்தில் தருக?

18) என்னுடைய ஊர் யாழ்ப்பாணம் - ..... 19) படியுங்கள் - ..... 20) ஆசிரியர் வருவாரா? - .....

✿ பாடசாலைக்கு தரம் 1முதல் 5 வரை கற்கும் மாணவர்கள் வரும் விபரங்களைப் பார்த்து விடை தருக?

வரவுமுறை	மாணவர் தொகை	மொத்தம்
துவிச்சக்கரவண்டி	𝍸 𝍸 𝍸 𝍸 𝍸 𝍸 𝍸	.....
பஸ்	𝍸 𝍸 𝍸 𝍸 𝍸 IIII	.....
முச்சக்கரவண்டி	𝍸 𝍸 𝍸	.....
வான்	𝍸 𝍸 III	.....
நடந்து	𝍸 𝍸 𝍸 I	.....

21) பாடசாலைக்கு வரும் மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

22) முச்சக்கரவண்டியில் வரும் மாணவர்கள் எத்தனைபேர்?

23) நடந்துவரும் மாணவர்களிலும் பார்க்க துவிச்சக்கர வண்டியில் வரும் மாணவர்கள் எத்தனை பேர் அதிகம்?

✿ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக?

24) 1கிலோ கிராம் சீனியின் விலை ரூ.104.00 எனின், $1\frac{3}{4}$ கி.கிராம் சீனியின் விலை யாது?

25) பலாவின் பிஞ்சினை எவ்வாறு அழைப்பர்? 26) வானூர்தி செலுத்துபவனை எவ்வாறு அழைப்பர்?

27) பி.ப.5.00 மணியை 24 மணி நேர மணிக்கூடு எவ்வாறு காட்டும்?

✿ கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

28) பாடசாலை அபிவிருத்திச் சபையின் தலைவராக அதிபர் செயற்படுவார். ( )

29) கரங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும் ( )

30) வீதியில் மஞ்சள் கோடுகள் பாதையைக் கடக்க இடப்பட்டுள்ளன ( )

✿ "எனக்கு விருப்பமான பாடசாலை எனது பாடசாலையாகும்" எனும் எண்ணக்கருவை மையமாகக் கொண்டு உமது கருத்துக்களை 6 வாக்கியங்களுக்கு மட்டுப்படுத்தி (எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்) எழுதுக

வினாத்தாள் -2இற்கான விடைகள்

பகுதி 1

1) ii 6) i
2) i 7) iii
3) iv 8) i
4) ii 9) iv
5) iii 10) ii

பகுதி 2

1) இரவு/இராக்காலம்
2) பூத்துனிபோல்/பூத்துனி
3) சேய்மையில்
4) கடல்/ஆழி/சாகரம்/பறவை
5) கற்பாறையை
6) Computer
7) Technology
8) என்னை
9) மதிய வணக்கம்
10) அமருங்கள்
11) நான் நல்ல சுகம்
12) ஸ்த்து! சு(ப்)ப சனீ(ப்)ப
13) மகே நம மது
14) தீமைசெய்பவன் துன்பப்படுவான்
15) அனுபவமற்ற செயல்களினால் பயன் கிடையாது
16) 15
17) 10
18) 1.5 (15/10)
19) 150 (15+10)
20) 30 (15-10)+(15+10)= 5+25=30
21) மா, பலா, வாழை
22) ஜனாதிபதி
23) திருக்குறள்
24) இலங்கை போக்குவரத்துச் சபை
25) சித்திரை வருடப்பிறப்பு
26) (✓)
27) (✓)
28) (✓)
29) (✓)
30) (✗)

அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியரது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

மன்னிக்கப்படுபவரைவிட மன்னிப்பவர்களே நன்மையடைகின்றனர்!

தவறு செய்பவர்களையும், துரோகம் செய்பவர்களையும் நாம் மன்னிக்கும்போது அவர்களுக்கு நன்மை நிகழ்கிறது என்றுதான் பொதுவாக எண்ணுகின்றோம். ஆனால் உண்மையில் மன்னிக்கப்படுபவர்களைவிட மன்னிப்பவர்களே நன்மை அடைகின்றார்கள். மற்றவர்களை மன்னிக்கும்போது நமக்குத்தான் நன்மைகள் அதிகம் நிகழ்கின்றன.

ஒருவர் செய்த தவறு அவர்களை உறுத்துவதால்தான் அவர்மேல் கோபம் வருகிறது. அவரை மன்னிக்கும்போது உங்கள் மனம் இலேசாகிறது. உங்கள் புன்னகை, தடையில்லாமல் வெளிப்படுகிறது. கோபத்தில் இருந்த நாட்களைவிட மகிழ்ச்சியில் இருந்த நாட்களில்தான் வாழ்வில் வெற்றிகளையும் வளங்களையும் நீங்கள் பெறுகின்றீர்கள்.

மிகக் கடுமையான விதிமுறைகளோடும், கோபத்தோடும் வாழ்கின்ற மனிதர்களின் மனதிலிருந்து எழுகிற அலைகள் எல்லோரையும் எட்டி நிற்கச் செய்கின்றன. உங்கள் மனம் மலர்ந்து அதில் மன்னிப்பு என் அந்தச் சந்தர்ப்பத்தை ஒரு பாடமாக மட்டுமே பார்க்கிற பக்குவத்தை வரவழைத்துக்கொள்கின்ற நறுமணம் பரவுகின்றபோது அந்த நறுமணம் அனைவரையும் ஈர்க்கிறது. காரணம் தெரியாமலேயே பலரும் உங்கள்பால் ஈர்க்கப்படுகிறார்கள். அனைவராலும் விரும்பப்படுகின்ற மனிதராக நீங்கள் ஆகுகின்றீர்கள்.

ஒருவரின் தகாத செயல் நடந்து முடிந்து நீண்டகாலம் ஆகலாம். ஆனால் அது குறித்த உங்கள் அதிர்ச்சியும் மனத்தாக்கமும் தொடர்ந்து கொண்டே போகின்றபோது நீங்களே துன்பத்துக்கு ஆளாகுகின்றீர்கள். யாரோ செய்த தவறுக்கு நீங்கள் துன்பம் அனுபவிப்பது என்ன நியாயம்? அந்த மனிதரை மன்னிக்கின்றபோது உங்கள் துன்பம் முடிவடைகிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் அறியாமையால் இழைக்கப்பட்ட அவமானம் என்பது நம்மைப் பொறுத்தவரை ஒரு தகாத தண்டனை. திரும்பத் திரும்ப அந்த நினைவுச் சுழலுக்குள் சிக்கும் போதெல்லாம் நம்மை நாமே தண்டித்துக்கொள்கின்றோம்.

கிறபோதுதானே அதிலிருந்து அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும். நடந்து முடிந்த சம்பவத்தை மாற்ற முடியாதே தவிர அடுத்து நாம் செய்வது மிகச் சிறந்த செயலாக அமைய வேண்டுமல்லவா? அந்தச் செயல்தான் மன்னிப்பு.

சம்பந்தப்பட்டவரின் முகத்தைப் பார்த்து நீங்கள் உங்கள் மன்னிப்பை பிரகடனம் செய்யக் கூட தேவையில்லை. மனதுக்குள்ளேயேகூட மன்னிக்கலாம். கொஞ்சம் கொஞ்சமாகவும் மன்னிக்கலாம். மனக்கண்முன் அவரை கொண்டு வந்து அவர் செய்த தவறுகளையும் அதனால் உங்களுக்கேற்பட்ட உணர்வுகளையும் மானசீகமாக சொல்லி இந்த சூட்டோடு அவரை மன்னிக்கின்றபோது உங்கள் மனம் தெளிவடைகிறது. இதுவரை சுமந்த பாரத்தை இறக்கிவைத்த நிறைவு ஏற்படுகிறது.

குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே இவற்றைத் தெரியப்படுத்தினால் எதிர்கால சந்ததியினராகிய எம் குழந்தைகளின் வாழ்வும் வெற்றி பெறும்.

நன்றி: வீரகேசரி

கூட்டுறவுச் சங்கம் ஒன்று பூரண அவற்றிபெற.....!

• பொதுப் பொருளாதாரத் தேவையும், போதிய அறிவும் சங்கத்தில் பூரணமான விசுவாசமுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட சங்கம் தமது இலக்கை அடையும்.

• அறிவும், ஆற்றலும், ஆளுமையும், நேர்மையும், கடமையுணர்வும் மிக்க கிளைக்குழு உறுப்பினர்கள், நெறியாளர் குழு உறுப்பினர்கள், தலைவர் போன்ற தன்னலமற்ற சேவை எண்ணம் கொண்டவர்களை தன்னகத்தே கொண்ட சங்கம் வெற்றிபெறும்.

• நேர்மை, ஆளுமை, அறிவு, ஆற்றல், பயிற்சியும் விசுவாசமும் உடைய பணியாளர்களைக்கொண்ட சங்கம் வெற்றி பெறும்.

• கடன் பெற்று இயங்காமல் சொந்த முதலில் சுதந்திரமாகவும், சுயமாகவும், ஜனநாயக ரீதியில் இயங்கும் சங்கம் வெற்றிபெறும்.

• மேலதிக நிதி வசதிகளையும், வங்கிச் சேவை வசதிகளையும் சிறப்பான தேவை கருதி செய்து கொடுக்கக்கூடிய கூட்டுறவு நிதி நிறுவனங்களின் உதவி பெற்ற சங்கங்கள் வெற்றிபெறும்.

• கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற் பாட்டுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்கக்கூடிய பலமான இரண்டாம் படிச் சங்கங்கள், மூன்றாம்படிச் சங்கங்கள் இருப்பின் அக்கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிபெறும்.

• கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனைச் சேவை, தொழில்நுட்பச் சேவை, பயிற்சி கொடுத்தல் போன்ற சேவைகளை புரிவதற்கு பலம்பொருந்திய கூட்டுறவு கோட்பாட்டு நிறுவனங்கள் உதவினால் அக்கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி பெறும்.

• கூட்டுறவுத் திணைக்களமும், அரச திணைக்களங்களும் தன்னலமற்ற, கட்டுப்பாடற்ற ஆலோசனையும், சேவையும் வழங்கினால் பூரணமான வெற்றியினை கூட்டுறவு அமைப்பு பெற்றுக் கொள்ளும். -நன்றி: கூட்டுறவுக் கருவூலம்-

நெறியாளர்குழு தெரிவு!

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அச்சங்கத்தின் நெறியாளர்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக திரு.க.சிவஞானம், உப தலைவராக திரு இ.பொ.ஜேசுராசா, செயலாளராக திரு ஜே.பி.குணரத்தினம், பொருளாளராக திரு க.தெய்வேந்திரம், மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக திரு அ.வேந்தன், திரு நா.வசிகரன், திரு ஆ.சிவனேந்திரன், திரு சி.தர்மகுலசிங்கம், திரு மா.குலேந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அவதாரம்

வல்லைவாசன்.
அச்சுவேலி

அப்பு ஆச்சி சொல்லிக் கொடுத்த
அறவழி நடந்த நாட்கள் நெஞ்சினில்
அமைதியாய் உறங்கிட
அன்பு பண்பு பாசம் கொண்டு
எம்மவர் வாழ்ந்த நாட்கள்
நெஞ்சினில் ஏங்கியே தவித்திட
கூட்டாஞ்சோறும் ஒடியற்கூழும்
கூடிக் குடித்த பௌர்ணமி இரவுகள்–இன்று
எம்மவர் செயலை ஏளனம் செய்திட
கைத்தொலைபேசியும் முகநூல் சேலையும்
கண்ணியம் கடந்து காதலைச் சொல்லிட
மாற்றங்கள் வேண்டிய மனித குலத்தினை
வேகமாய் மாற்றிடும் கலியுக வரவினால்
பந்தம் பாசம் பற்றறுந்திங்கு பழிச் செயல் செய்திடும்
மனிதர்கள் செயலது பாரினில் அழிந்திட
பரமன் அவதாரம் தோன்றிடவேண்டுமே!

வசந்தம்

மாற்றங்கள் வேண்டி மனித குலமின்று
தேற்றங்கள் தாண்டி தேடிய பொக்கிசம்
வாட்டங்களின்றியே மனிதர்கள் வாழ்ந்திட
தேட்டங்கள் தான் கொண்டு தேடிய செல்வங்கள்
நாட்டினை உயர்த்திட நல்வழி சொல்லிடும்
ஏட்டினை கற்றவர் ஏற்றங்கள் கண்டிட
ஏர்கொண்டு உழைத்தவர் ஏங்கியே நின்றிட
புதுமைகள் படைத்திடும் புவிதனில் என்றும்
நீதிகள் கிடைத்திடும் என்றெண்ணி வாழும்
பாமர மக்களின் வாழ்வினில் வசந்தம்
வந்திடத் தென்றல் வீசுமா உலகில்?

கதிரை உனக்கு இல்லை

மனிதன் நினைப்பதுண்டு
கதிரை நிலைக்குமென்று
கதிரை நினைப்பதுண்டு
பாவம் மனிதன் என்று

உரிமைக்குரல் கொடுத்து
உறவை வளர்த்ததினால்
உயர்வு தானும் பெற்று
உயர்ந்த வாழ்வும் பெற்றீர

உயர்வு தனில் இருந்து
உதவ மறுத்து வீட்டீர்
உயர்வு தனை இழந்து
உடலால் இளைத்து வீட்டீர்

அப்போ தெரியவில்லை
ஆட்சி அவனதென்று
இப்போ தெரிகிறதா
கதிரை உனதில்லையென்று

இ.காந்தன்–கோப்பாய்

பார்வை நோய்

எனக்கு நீந்தத் தெரியும் -ஆனாலும்
உன் மன ஆழத்தில் மூழ்கிப் போனேன்
எனக்கு மருத்துவம் தெரியும் -இருந்தாலும்
உன் பார்வை நோய்க்குப் பலியாகிப் போனேன்
எனக்கு விபரம் தெரியும் என்றாலும்-உன்
காதல் திருவிழாவில் காணாமல் போனேன்
அவ்வப்போது அப்புறப்படுத்தி விடுகிறாயே
என் நினைவுகளை உன் வீட்டில் மீளும்
முப்பைகளாகி விட்டனவா....?
என் கவலைப் பாதைகளாவும்
கதவைத் திறக்குதே உன்னால்

பா.மதனபாரதி–அல்வாய்

எங்கே மனம்?

நீங்கள் எப்போதாவது உங்கள் மனதைக் கட்டுப்படுத்த எண்ணியதுண்டா? அப்போது தான் நீங்கள் மனம் என்பது ஒரு சூட்சும சக்தி என்பதை உணர்ந் திருப்பீர்கள். மனம் என்பது காற் றைப்போல் விசை, சக்தி, அசை வைக் கொண்டது. ஆனால், திட்டவட்டமான உருவமைப் பற்றது. நம்மால் மனதை அவ தானிக்க முடியாவிடினும் அதன் தொழிற்பாடுகளையும், தாக்கத் தையும் உணரமுடிகிறது. மனம்தான் எம் செயல்களை யும் எண்ணங்களையும் நிர்வ கிக்கும் நீதிபதி. ஆனால் மனித உடலில் அதன் அமைவிடம் எங்கே என்பது இன் னும் அறியப்படாத விடயமே. இன்றுவரை மனம் என்பதற்கு திட்டவட்டமான வரையறை எதுவும் வழங்கப்படவில்லை. முடிந்தால் நீங்களாவது ஒரு வரையறையை உங்கள் மனதிடமே கேட்டுப் பாருங்கள்.

வலிகாமம் கொத்தணியால் முன்பள்ளிகளின் ஆசிரியர், மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன!

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் உறுப்புரிமைச் சங்கங்களின்

அனுசரணையில் இயங்கும் முன் பள்ளிகளின் ஆசிரியர், மாணவர் களுக்கான 2012ம் ஆண்டுக்கான இலவச சீருடைத்துணி கடந்த மாதம் கொத்தணியின் மண்டபத் தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து வழங்கப்பட்டது.

யாழ். கூ. அ. உதவி ஆணையாளர் திரு வீ.கே. அருந் தவநாதன் பிரதம விருந்தினரா கக் கலந்துகொண்ட இந்நிகழ் வில், பின்வரும் விபரப்படி சீரு டைத் துணிகள் வழங்கப்பட்டன.

சங்கானை சங்கம்- 15 முன்பள்ளி களைச் சேர்ந்த 23 ஆசிரியர் கள், 316 மாணவர்கள்.

தெல்லிப்பளைச் சங்கம்- 07 முன்பள் ளிகளைச் சேர்ந்த 10 ஆசிரியர் கள், 146 மாணவர்கள்.

சுன்னாகம் சங்கம்- 21 முன்பள்ளி களைச் சேர்ந்த 33 ஆசிரியர்கள், 465 மாணவர்கள்.

மானிப்பாய் சங்கம்- 08 முன்பள்ளி களைச் சேர்ந்த 15 ஆசிரியர்கள், 182 மாணவர்கள்.

பண்டத்தரிப்பு சங்கம்- 07 முன்பள்ளி களைச் சேர்ந்த 15 ஆசிரியர்கள், 264 மாணவர்கள்.

கோண்டாவில் சங்கம்- 07 முன்பள்ளி களைச் சேர்ந்த 14 ஆசிரியர்கள், 209 மாணவர்கள்.

காரைநகர் சங்கம்- 03 முன்பள்ளி களைச் சேர்ந்த 05 ஆசிரியர்கள், 97 மாணவர்கள் ஆகியோருக்கே இச் சீருடைத்துணிகள் வழங்கப் பட்டுள்ளன.

40 ஆண்டுகளில்...

-1ம் பக்கத் தொடர்ச்சி-

திரு வ.இராசலிங்கம், தெல்லிப் பளை பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திரு கா.சிவஞானம்,அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமை யாளர் திரு பொ.செல்வராசா, தென்மராட்சிக் கொத்தணி பொதுமுகாமையாளர் திரு க.அருட்செல்வன், வேலணை பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச்சங்க பொதுமுகா மையாளர் பா.சித்திரவடிவேல் ஆகியோருடன் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி அலுவலர் திரு இ.பாலச் சந்திரன், தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராஜா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

எமது பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்கள் 40வது ஆண்டினை அண்மித்து வந்துள்ள நிலையில் நாம் அதனையிட்டு பெருமைய டைவதோடு, எமது செயற்பாடு களின் வீச்சையும் அதிகரித்துச் செல்கின்றோம்.

அந்த வகையில்....

கிராமிய வங்கிச் சேவை

அங்கத்தவர் ஓய்வூதிய சேவை

கல்விச் சேவைகள்

குடைத் தொகுதி வாடகை

கதிரை வாடகை

போத்தற் கள் உற்பத்தி, விற்பனை

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தொலைபேசி 021 223 0395

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.